# கலைஞரின் நினைவைப் போற்றும் திராவிட மாடல் நாயகரின் சீர்மிகு திட்டங்கள்!



தமிழினத் தலைவர்-முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 7.8.2018 அன்று நம்மையெல்லாம் விட்டு பிரிந்து சென்றாலும், இன்றும் நம்மோடு, செம்மொழி - தமிழ்மொழியோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

தமிழ் நாட்டுக்கு அவர் தீட்டிய திட்டங்கள் இன்றும் காலத்தால் அழியாத திட்டங்களாக, கல்லில் வடிக்கப்பட்ட திட்டங்களாக பதிவுப் பெற்றிருக்கிறது.

தமிழ்நாட்டு மக்களுக்காகவே வாழ்ந்து தன் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்து மக்கள் பணி ஆற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு நன்றி செலுத்தும் வகையில் கலைஞர் பெயரில் பல்வேறு திட்டங்களை புகழ் மாலையாக சூட்டியுள்ளது.

கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் தீட்டப்பட்ட திட்டங்களை ஒவ்வொரு பூவாகத் தொடுத்து, புகழ்மாலையாக கலைஞரின் தவப்புதல்வர், நமது கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சூட்டியுள்ளார்.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும் நான்....என்று தொடங்கி 07.05.2021 அன்று தமிழ்நாட்டின் முதல்வராகப் பொறுப்பேற்றதில் இருந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சூட்டிய புகழ்மாலை இதோ:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது உயிருக்கு உயிராக போற்றும் பேரறிஞர் அண்ணா பெயரில் அமைந்துள்ள தலைமைக் கழகமான அண்ணா அறிவாலயம் வளாகத்தில் 16.12.2018 அன்று அகில இந்திய காங்கிரஸ் தலைவராக அப்போது இருந்த திருமதி சோனியா காந்தி, ராகுல் காந்தி, கேரள மாநில முதல்வர் பினராயி விஜயன், ஆந்திர மாநில (அப்போது முன்னாள் முதல்வர்) முதல்வர் சந்திரபாபு நாயுடு, புதுச்சேரி மாநில அப்போதைய முதல்வர் நாராயணசாமி உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றிட இனமானப் பேராசிரியர் அவர்கள் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தினந்தோறும் காலை மாலை என்று வருகை தந்த இடம் அண்ணா அறிவாலயம், அவ்விடத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை திறக்கப்பட்டது. அண்ணா அறிவாலயம் காலம் காலமாக நிலைத்திருக்கும். அதே போன்று கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையும் காலகாலத்திற்கும் நிலைத்து நிற்கும்.

கலைஞர் அவர்களால் தனது மூத்த பிள்ளை என்று கூறப்பட்ட 'முரசொலி'யின் வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி திறந்து வைத்தார். இதே போன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை ஈரோடு, காஞ்சிபுரம், தஞ்சை, திருச்சி, மதுரை, சேலம், திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் தி.மு.கழகம் சார்பில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து கலைஞர் அவர்களுக்கு புகழ்மாலை சூட்டினார்.

இந்திய நாட்டின் வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழக சட்டமன்றத்தில் அப்போதைய மேதகு குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்த் அவர்களை அழைத்து சட்டப் பேரவையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை 2.8.2021 அன்று திறந்து வைத்து கலைஞர் அவர்களுக்கு பெருமை சேர்த்தார் முதல்வர்!

தமிழ்நாடு சட்டப்பேரவையில் 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6 ஆம் தேதி அன்று தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் அமைச்சர் அறிவிப்பில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றி வரும் சிறந்த இதழாளர் ஒருவருக்கு ஆண்டு தோறும் 'கலைஞர் எழுதுகோல் விருது' மற்றும் ரூபாய் 5 இலட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் தமிழக அரசு சார்பில் வழங்கப்படும் என்று அறிவித்தார். அதன்படி இந்த விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து வழங்கப்பட்டு கலைஞர் அவர்களின் புகழ்க்கு மேலும் புகழ் மகுடம் சூட்டப்பட்டுள்ளது. கலைஞர் செம்மொழி தமிழ் விருது வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரின் அடையாளங்களில் ஒன்றாக இருப்பது உலகத்தில் உள்ள அனைத்து நூல்களையும் மருத்துவம், பொறியியல் ஆராய்ச்சியாளர்கள்,மாணவ மாணவியர், சிறார்கள், குழந்தைகள் என்று அனைத்துத் தரப்பினரும் படிப்பதற்காக கலைஞர் அவர்களால் உருவாக்கிய நூலகம் ஒன்று உண்டென்றால் அது பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம்.

அதே போன்றதொரு நூலகம் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம் ஏழு அடுக்கில் ரூபாய் 114 கோடி மதிப்பீட்டில் மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம் மிகப் பிரமாண்டமாக, எழிலார்ந்த முறையில் அமைக்கப்பட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதே போன்றதொரு கலைஞர் நூற்றாண்டு நூலகம் கோவை மாநகரில் அமையவிருக்கிறது. இதற்கான ஆயத்தப் பணிகளும் தொடங்கப்பட்டு விட்டன.

கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நினைவிடம் அமைத்தார். கலைஞர் அவர்களின் தனயன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை மெரீனா கடற்கரையில் கலைஞர் நினைவிடம் 2.21 ஏக்கர் பரப்பளவில் 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மிகவும் எழிலார்ந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது. கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் வகையில் 'கலைஞர் உலகம்', ஒளி ஒலி கொண்ட 3டி வடிவில் திரைப்படக் கண்காட்சி கொண்டு கலைஞர் அவர்களின் நினைவிடம் எழிலார்ந்த வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

கழகத்தினருக்கு சென்னை அண்ணா அறிவாலயம் தான் பயிற்சிப் பட்டறை. அதே போன்று டெல்லியிலும் ஒரு பயிற்சி பட்டறையை தொடங்கிட வேண்டும் என்று திட்டமிட்டு 1.4.2022 அன்று புது டெல்லியில் தி.மு.கழகத்திற்கென்று அண்ணா - கலைஞர் அறிவாலயம் கட்டி தி.மு.க. வரலாற்றில் இடம் பெறச் செய்துள்ளார் கழகத் தலைவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 ஆம் தேதி அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவித்தார்.

சென்னையிலிருந்து புதுச்சேரிக்குச் செல்லும் கிழக்கு கடற்கரை சாலைக்கு(மாமல்லபுரம் வரை) முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி சாலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு அச்சாலையும் கலைஞரின் பெயரை காலமெல்லாம் சொல்லும் வரலாற்றுப் பதிவாகும்.





பார் போற்றும் தலைவர் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு புகழ் மகுடமாகத் திகழ்வது சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைதான்.

இதனை சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலில் அறிவித்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவாக கொண்டாடப்படும் என்று கூறியதுடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதன் படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை 28.5.2022 அன்று அப்போதைய இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு அவர்கள், தமது திருக்கரத்தால் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திறந்து வைத்தார். இந்த சிலை திறப்பு விழாவில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், வாழ்வில் ஓர் பொன்னாள், எந்நாளும் மகிழ்ந்து போற்றும் நன்னாள், தமிழ் நிலத்தை வான் உயரத்துக்கு உயர்த்திய தலைவர் கலைஞர் அவர்களுக்கு 16 அடி உயர சிலை எழுப்பப்பட்டுள்ளது. பெரியார், அண்ணாவுக்கு இடையில் கலைஞர் அவர்களின் சிலை மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது

தந்தை பெரியாருக்கும், பேரறிஞர் அண்ணாவுக்கும் இடையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை அமைந்து இருப்பது பொருத்தமாக இருக்கிறது. இருவரிடமும் அரசியல் பாடம் படித்த கலைஞர் அவர்களின் சிலை இருவருக்கும் இடையில் அமைந்து இருப்பது கூடுதல் மகிழ்ச்சி. கலைஞர் அவர்களின் கனவுக் கோட்டையான ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திலேயே சிலை அமைந்து இருக்கிறது. இந்தியாவில் பல குடியரசுத்தலைவர்களையும் நிலையான ஆட்சியையும் உருவாக்க துணை நின்றவர் கலைஞர். எந்தத் துறையில் பயணித்தாலும் அதில் கோலோச்சியவர். கலைஞர் அவர்கள் கடந்த ஆட்சியாளர்களால் நள்ளிரவில் கைது செய்யப்பட்டபோது கைதுக்கு எதிராக குரல் எழுப்பியது குடியரசுத் துணைத் தலைவராக இருக்கும் வெங்கையா நாயுடு அவர்கள்தான். கலைஞர் அவர்களின் சிலை திறப்புக்கு யாரை அழைப்பது என்று யோசித்த போது சட்டென நினைவுக்கு வந்தவர் வெங்கையா நாயுடு அவர்கள்தான். மிகச் சிறந்த நாடாளுமன்ற ஜனநாயகவாதி என்ற பெயர் பெற்ற குடியரசுத் துணைத் தலைவர் அவர்களால் கலைஞர் அவர்களின் சிலையைத் திறந்தது சாலப் பொருத்தமானது என்று குறிப்பிட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் இந்த சிலையின் பீடத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வடித்தெடுத்து, தி.மு.கழகத்திற்கு வழங்கிய தாரக மந்திரமான

**அண்ணா வழியில் அயராது உழைப்போம்,**
**ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்**
**இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்,**
**வன்முறைத் தவிர்த்து வறுமையை வெல்வோம்**
**மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி!**

என்ற இந்த ஐம் பெரும் முழக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

சென்னை கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு சிறப்பு மருத்துவமனை திறந்து வைத்து கலைஞருக்கு புகழ் சேர்த்தார்.

மதுரை அலங்காநல்லூரில் கலைஞர் நூற்றாண்டு விழா ஏறுதழுவுதல் அரங்கம் அமைத்து புகழ் சேர்த்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சொந்த ஊரான திருவாரூருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவாரூர் காட்டூரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு கலைஞர் கோட்டம் அமைத்து கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் புகழ் சேர்த்தார்.

தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆயிரம் ரூபாய் எங்கே எங்கே என்று எதிர்க்கட்சிகள் எல்லாம் கோரிக்கை விடுத்த நிலையில், 'சொன்னதைச் செய்வோம் சொல்வதைச் செய்வோம்' என்ற கலைஞர் அவர்களின் தாரக மந்திரத்தை ஏந்தி ஆட்சி நடத்தி வரும் நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்கள் வாழ்க்கையில் முன்னேற பல்வேறு திட்டங்களைத் தீட்டி அத்திட்டங்களை திறம் பட செயல்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆவார்கள்.

அதன் காரணமாக மகளிர்க்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்திற்கு "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை" என்று பொருத்தமான பெயரை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சூட்டி அத் திட்டத்தினை 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் அன்று பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் அன்று தொடங்கி வைத்தார்.

சென்னை மாநகரம் நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து கொண்டே போவதால், சென்னை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தை சென்னைக்கு அருகே வேறு இடத்தில் அமைக்க திட்டமிடப்பட்டு சென்னை வண்டலூருக்கு அருகே கிளாம்பாக்கத்தில் அமைத்து அந்த புறநகர் பேருந்து நிலையத்திற்கு "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்" என்ற பெயர் சூட்டி திறந்து வைக்கப்பட்டது.

## ஜூன் 3, செம்மொழி நாள்!

தமிழ்நாடு சட்டப் பேரவையில் முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின் படி தமிழ்வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தமது அறிவிப்பில் தமிழ்மொழிக்கு செம்மொழி அங்கீகாரம் பெற்று தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் ஜூன் 3 ஆம் தேதி அன்று செம்மொழி நாளாக கடைப்பிடிக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டதுடன் அடுத்த ஆண்டு 2025 ஆம் ஆண்டு ஜூன் மூன்றாம் தேதி "செம்மொழி நாள் விழா"வாக கொண்டாடப்படும் என்றும் அறிவித்தார். மேலும் முத்தமிழறிஞர் கலைஞர் விருது தோற்றுவிக்கப்பட்டு ஆண்டுதோறும் முத்தமிழறிஞர் கலைஞர் விருது வழங்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு தமிழ்நாடு அரசு சார்பில் கடந்த ஆண்டு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அமைச்சர்கள் தலைமையில் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு துறை வாரியாக கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை பிரதிபலிக்கக் கூடிய வகையில் புகைப்படக் கண்காட்சிகள், கவியரங்குகள், கட்டுரைப் போட்டிகள், பட்டிமன்றங்கள், பேச்சுப்போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், கலைஞர் புகழ் அரங்க நிகழ்ச்சிகள், கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் என்று கடந்த 3.6.2023 முதல் 3.6.2024 வரையில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தி தமிழ்நாடு அரசு சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு பூ மாலை சூட்டினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது தந்தைக்கு தீட்டிய சீரிய திட்டங்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளில் நினைத்து பார்க்கும் போது

**மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை**
**என்நோற்றான் கொல்எனும் சொல்.**

என்ற திருக்குறள் தான் நமக்கு நினைவுக்கு வருகிறது.

**வளர்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொண்டு!**

**வாழ்க கலைஞர்! ஓங்குக கலைஞர் புகழ்!!**